**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | Number of the Suit | O.S.No. | : | 282/2008 |
| | | Rank of the Witness | P/W's | : | 2 |
| DEPOSITION OF WITNESS | | | | | |
| NAME | Murugesan | CASTE | | : | |
| S/O. / W/O. | Seruvakonar | RELIGION | | : | |
| VILLAGE | | CALLING | | : | |
| TALUK | | AGE | | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : **14-09-2018**

இந்த சாட்சிக்கு கேட்கும்திறன் இல்லாத காரணத்தினால் CRP.(MPD)(MD)No.622/2013, 19.06.2018-ம் தேதியிட்ட உத்தரவுப்படி பிரதிவாதி தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகள் இந்நீதிமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள கணினி திரையில் தனித்தனி வினாவாக தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சியால் அது வாசிக்கப்பட்டு அவரால் சொல்லப்பட்ட பதில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வழக்கின் சூழ்நிலை மற்றும் தன்மையை கருத்தில் கொண்டு கேட்கப்பட்ட வினாக்கள், கொடுக்கப்பட்ட விடைகள் ஆகியவை வினா விடை வடிவிலேயே தட்டச்சு செய்யப்பட்டுள்ளன.

1. முத்துச்சாமி கோனார் மகன் மு.வெள்ளைசெருவக்கோனார் என்றால் சரியா? சரிதான்.

2. மேற்படி மு.வெள்ளைசெருவக்கோனாரின் மகன்கள் தான் பாலசுப்பிரமணியன், காசிலிங்கம், நந்தகோபால் மற்றும் செருவலிங்கம் என்றால் சரியா? சரிதான்.
மேற்படி மு. வெள்ளைசெருவக்கோனாருக்கு தனலெட்சுமி என்ற மகள் உண்டு என்றால் சரியா? சரிதான்.

3. மருதாயிஅம்மாள் என்பவர் எனது தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரி என்றால் சரியா? சரியல்ல.

4. மு.வெள்ளைசெருவக்கோனாருக்கு எத்தனை மனைவிகள் இருந்தது என்றால் எனக்கு தெரிந்து 2 மனைவிகள் உண்டு.

5. அந்த இரண்டு மனைவிகளின் பெயர்கள் என்ன என்றால் மருதாயி அம்மாள், பெரிய மருதாயி.

6. என்னுடைய சகோதரி மஞ்சுளா என்றால் சரிதான்

7. அந்த மஞ்சுளாவை மு.வெள்ளைசெருவக்கோனாரின் மகன் பாலசுப்பிரமணியனுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றால் சரிதான்.

8. 1ம் பிரதிவாதியான பெரியசாமியின் தகப்பனார் கு.சடையாண்டி கோனார் தனக்காகவும், அப்போது மைனராக இருந்த தனது மகன் செருவக்கோனாருக்காகவும் வா.சா.ஆ,1 கிரைய பத்திரத்தை மு.வெள்ளைசெருவக்கோனாருக்கு 06.12.1930ம் தேதியில் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான்.

9. அந்த பத்திரத்தில் கட்டுப்பட்ட சொத்து சர்வே எண்.334/E-ல் 45 செண்ட் மட்டும் என்றால் சரிதான்.

10. அந்த பத்திரத்தில் மேற்படி சொத்தை என் பாகத்திற்கு கிடைத்தது என்று கு.சடையாண்டி கோனார் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

11. அதே கு.சடையாண்டி கோனார் தனக்காகவும் அப்போது மைனராக இருந்த தனது மகன் செருவக்கோனாருக்காகவும், 14.12.1931ல் வா.சா,ஆ.2 கிரைய பத்திரத்தை அதே மு. வெள்ளைசெருவக்கோனாருக்கு எழுதி கொடுத்தார் என்றால் சரிதான்.

12. அந்த பத்திரத்தில் கட்டுப்பட்ட சொத்து சர்வே எண்.334/1ல் 98 செண்டில் தென்புறம் 49 செண்ட் என்றால் சரிதான்.

13. இந்த பத்திரத்திலும் மேற்படி கு.சடையாண்டி கோனார் மேற்படி சொத்தை தனக்கு பாத்தியமான சொத்து என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

14. அதே கு.சடையாண்டிகோனார் 17.09.1939ல் வா.சா.ஆ,3 கிரைய பத்திரத்தை அதே மு.வெள்ளைசெருவக்கோனாருக்கு சர்வே எண்.334/14ல் கட்டுப்பட்ட 27 செண்டை பொறுத்து கிரைய பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான்.

15. 17.09.1939ம் தேதியிட்ட வா.சா.ஆ.3ல் கட்டுப்பட்ட சொத்து கு.சடையாண்டி கோனாருக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

16. கருப்பணக்கோனார் என்பவர் சர்வே எண்.334/9ல் 60 செண்டை பொறுத்து மு.வெள்ளைசெருவக்கோனாருக்கு 11.09.1937ம் தேதியிட்ட வா.சா.ஆ.4 கிரைய பத்திரத்தின் மூலமாக கிரையம் கொடுத்ததாக நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

17. தற்போதுள்ள சர்வே எண்.334/6ல் கட்டுப்பட்ட சொத்துக்கள் பழைய சர்வே எண்கள் 334/6ல் 16 செண்ட், 334/1P ல் 89 செண்ட், 334/8P மற்றும் 9P-யை சேர்த்து 60 செண்ட் ஆக மொத்தம் 165 செண்ட் என்றால் சரிதான்.

18. மேற்படி 334/6ல் பழைய செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் படி 1 ஏக்கர் 65 செண்ட் உள்ளது என்றும், தற்போதைய வருவாய் ஆவணங்களின் படி 1 ஏக்கர் 89 செண்ட் உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக 28.09.18 அன்று விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

(ஒம்.). எம். சய்யத் சுலைமான் ஹீசைன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி